# A STUDY OF THE DEVELOPMENT OF AN EFFECTIVE TRANSPORT SYSTEM IN THE MUTHUR AREA

PERMANENT REFERENCE

388.072
AFP (PR)

MR. ANTHONY SAMY KUTHALEN
ATPUTHA ANTON RAJ

FCM509
Project Report
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE & MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRILANKA
2002

# ஆய்வுச்சுருக்கம்

இன்று உலகின் துரிதமான விஞ்ஞான வளர்ச்சியால் மனித குலம் தமது வாழ்க்கைத் தரத்தையும், வேகத்தையும் அதிகரித்துள்ளது. நாளுக்கு நாள் அதிகரிக்கும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களால் மனித செயற்பாடுகளின் கடினத்தன்மை இலகுவாக்கப்படுகின்றது. வியாபாரத்தை இலகுவாக்க நிதி, வங்கி, காப்புறுதி, போக்குவரத்து, தொடர்பாடல், களஞ்சியப்படுத்தல் போன்ற துணைநிலைச் சேவைகள் உருவாகின. ஆனால் இன்று வர்த்தகத்தின் முதுகெழும்பு மட்டுமல்லாது பல நாடுகளின் பொருளாதார இதயமாகவும் இவை காணப்படுகின்றன.

இவற்றுள் முக்கியமான ஒன்றாக போக்குவரத்தை குறிப்பிடலாம். இன்று வர்த்தகத்தின் அனைத்து பிரதான செயற்பாடுகளுக்கும் போக்குவரத்தின் பங்கு அளப்பரியது. வர்த்தகத்திற்கு மட்டுமன்றி விஞ்ஞான, தொழிநுட்ப, சமூக, இராணுவ செயற்பாடுகளுக்கும் போக்குவரத்து மிக முக்கிய பணியாற்றுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் போக்குவரத்தின் நவீன சாதனங்களின் அபிவிருத்தி அதி தீவிரமானதாகும். ஒலியையும் விட பல மடங்கு வேகம் பயணிக்கக்கூடிய சாதனங்களைக்கூட கண்டுபிடித்துவிட்டனர். இலங்கையில்கூட நாளுக்கு நாள் புதிய போக்குவரத்து சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டாலும் சில பின்தங்கிய கிராமங்களிலுள்ள மக்கள் இன்றும் தமது போக்குவரத்தினை கால் நடையாக மேற்கொள்கின்றனர் என்பது நடந்து கொண்டிருக்கின்ற உண்மையே.

திருமலை மாவட்டத்தின் பிரதான பிரதேசங்களுள் ஒன்றான மூதூர் பிரதேசத்தின் மக்கள் ஆரம்பத்திலிருந்தே போக்குவரத்து சம்பந்தமாக பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். கடல் போக்குவரத்து சாதனங்கள் இல்லாமலும், பழுதான வீதிகளில் வரையறுக்கப்பட்ட, இருக்கும் சில பேருந்துகள் சேவையில் ஈடுபட அவையும் பழுதாகின்றன. இப்படி அன்றிலிருந்து இன்றுவரை நடைபெறுகிறது. ஆகவே மூதூர் பிரதேசத்தின் விளைத்திறனான போக்குவரத்து முறைமையின் அபிவிருத்தி பற்றிய ஓர் கற்கை எனும் எனது இவ்வாராய்ச்சிக் கட்டுரையில் மூதூர் பிரதேச மக்கள் எதிர் நோக்கும் போக்குவரத்து சம்பந்தமான பிரச்சினைகளையும் அவைகளை தீர்க்கக் கூடிய வழிவகைகளையும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

முதலாவது அத்தியாயம் ஆய்வு பற்றிய அறிமுகத்தையும், ஆய்வு செய்யக் காரணமாயிருந்த பிரச்சினைகளையும், ஆய்வு நோக்கம், தரவு சேகரிப்பு, மதிப்பீடு, எண்ணக்கருவாக்கம் போன்றவற்றை விபரிக்கின்றன.

இரண்டாவது அத்தியாயமானது போக்குவரத்து பற்றியும், போக்குவரத்தின் வகைகள் பற்றியும், இலங்கையின் போக்குவரத்துத் துறை வளர்ச்சி அபிவிருத்தி போன்றன பற்றியும், இலங்கையிலுள்ள பாதைகள் அவற்றினது அமைப்புக்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது அத்தியாயமானது ஆய்வுப் பிரதேசத்தில் போக்குவரத்து ஏன் முக்கியமானது என்றும், ஒழுங்கான போக்குவரத்து வசதியின்மையால் மக்கள் படும் அவஸ்த்தைகள், உயிரிழப்புகள் பற்றியும், இருக்கும் உயிராபத்துக்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

நாலாவது அத்தியாயமானது எண்ணக்கருவாக்கம் மூலம் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை வினாக்கொத்துக்கள் மூலம் மக்களின் கவனத்திற்கு அனுப்பி அவர்களின் வெளிப்பாடுகளுடன் பிரச்சினைகள் உண்டெனபதும் அவை பல காலமாக தீர்க்கப்படாமல் உள்ளதென்பதும் விளக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது அத்தியாயமானது எண்ணக்கருவாக்கப் பிரச்சினைகளின் காரண காரியங்களைக் கண்டறிவதுடன் அவற்றின் விளைவுக்களையும் ஆராய்தல்.

ஆறாவது அத்தியாயமானது இப்பிரச்சினைகளுக்குறிய தீர்வுகளை முன்வைத்தலாகும்.

ஆகவே இவ்வாய்வின் முடிவில் மூதூர் போக்குவரத்துப் பிரச்சனைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கப்படுமென்ற பேரவாவுடனேயே இவ்வாய்வினை மேற்கொள்கின்றேன். தயவு செய்து மூதூர் பிரதேச பெரியவர்களும், போக்குவரத்து சம்பந்தப்பட்ட அரச உத்தியோகஸ்தர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயம் தொடர்பாக எனக்கு பூரண ஒத்தாசை நல்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

ஆய்வாளன்
A.S.K. அற்புதன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 0.1 | ஆய்வுச்சுருக்கம் | i |
| 0.2 | நன்றியுரை | iii |
| 0.3 | அட்டவணைகளின் பட்டியல் | iv |
| 1. | அறிமுகம் | 01 |
| 2. | நூலாய்வு | 08 |
| 3. | பிரதேச ஆய்வு | 36 |
| 4. | தகவல் முன்வைத்தல் | 49 |
| 5. | தகவல் பகுப்பாய்வு | 90 |
| 6. | பரிந்துரைகளும், முடிவுரையும் | 100 |
| | பின்னிணைப்புக்கள் | |
| | உசாத்துணை நூல்கள் | 110 |
| | வினாக்கொத்து | 111 |